Dinathanthi 17-05-15

### கோயம்பேடு-எழும்பூர் இடையே

# சுரங்கப்பாதையில் தண்டவாளம் அமைக்கும் பணி தீவிரம்

சென்னை, மே.17–

கோயம்பேடு–எழும்பூர் இடையே சுரங்கப்பாதையில் ரெயில் தண்டவாளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. ஓரிரு மாதங்களில் இந்த பணி நிறைவடையும் என்று அதிகாரிகள் கூறினார்கள்.

## மெட்ரோ ரெயில் சேவை

சென்னையில் வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலும், சென்டிரல் முதல் பரங்கிமலை வரையிலும் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் நடந்து வருகிறது. இதில் சுரங்கப்பாதை 24 கிலோ மீட்டர் தூரமும், 21 கிலோமீட்டர் தூரம் உயர்த்தப்பட்ட வழித்தடத்திலும் பணிகள் நடந்து வருகிறது.

இதில் மொத்த தூரத்தில் 55 சதவீதம் சுரங்கப்பாதையாகும். ஆக மொத்தம் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு நடந்து வரும் பணியில், தரைக்குமேல் 13 ரெயில் நிலையங்களும், சுரங்கப்பாதையில் 19 ரெயில் நிலையங்களும் ஆக 32 ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதில் சுரங்கப்பாதை பணியில் 5 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## சுரங்கம் தோண்டும் எந்திரம்

சுரங்கம் தோண்டும் எந்திரம் (டணல் போரிங் மிஷின்) உதவியுடன் சென்னையில் 5 கட்டமாக நடந்து வரும் சுரங்கம் தோண்டும் பணியில், முதல்கட்டமாக திருமங்கலம்–அண்ணாநகர் டவர், அண்ணாநகர் கிழக்கு – செனாய் நகர் வரை 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 பாதையில் 6 கிலோ மீட்டர் தூரத்துக்கு சுரங்கம் தோண்டும் பணிகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 13–ந் தேதி நிறைவடைந்தது.

2016–ம் ஆண்டு மார்ச் மாதம் கோயம்பேடு, திருமங்கலம், செனாய்நகர், கீழ்ப்பாக்கம் வழியாக எழும்பூருக்கு ரெயில் இயக்குவதற்காக போர்க்கால அடிப்படையில் சுரங்கப்பாதையில் தண்டவாளம், அவசரகால வழி மற்றும் மின்சார உபகரணங்கள் பொருத்துதல் உள்பட பல்வேறு பணிகள் நடந்து வருகிறது.

## சுரங்கப்பாதையில் பணி

செனாய் நகர் முதல் திருமங்கலம் வரை உள்ள 2 ஆயிரத்து 797 மீட்டர் நீளம் கொண்ட சுரங்கப்பாதை பணிகள் நிறைவடைந்த நிலையில் தற்போது அங்கு ரெயில்வே தண்டவாளம் அமைக்கும் பணி நிறைவடைந்து உள்ளது. இதனை தொடர்ந்து ஓரிரு மாதங்களில் இப்பாதையில் சிக்னல்கள் அமைக்கும் பணி தொடங்கவிருக்கிறது. இதற்கான கருவிகள் தற்போது வரவழைக்கப்பட்டு உள்ளன.

பொதுவாக உள்ள அகல பாதை (பிராட்கேஜ் 1,676 எம்.எம்.), குறுகிய பாதை (மீட்டர் கேஜ்) என்ற இரண்டு வகையிலும் இல்லாமல் ஸ்டேண்டட் கேஜ் (1,455 எம்.எம்) அதாவது அகலபாதையை விட சற்று குறைவான அளவில் ரெயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு தேவையான தண்டவாளங்கள் கொண்டுவரப்பட்டு உள்ளன. இந்த பணியுடன் 500 மீட்டர் இடைவெளியில் ஒரு தீயணைப்பு கருவியும், 250 மீட்டர் இடைவெளியில் ஒரு தொலைபேசி வசதியும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட தகவலை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறினார்கள்.